# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
# சைவநெறி / ශෛව ධර්මය - I

சுட்டெண்:................................. தரம் : **10** நேரம்: 1 மணி

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
(iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.

---

1. "தாயினும் நல்ல தலைவர்......." என்ற தேவாரத்தைப் பாடியவர்
   1) சம்பந்தர் 2) அப்பர்
   3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

2. இருபத்தேழு நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படுவது
   1) திதி 2) யோகம் 3) கரணம் 4) வாரம்

3. ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்து வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சட்டி வரையுள்ள பகுதியில் அனுட்டிக்கப்படும் விரதம்
   1) விநாயக சஷ்டி 2) கேதார கௌரி
   3) நவராத்திரி 4) கந்தசஷ்டி

4. திருமணத்தில் பாணிக்கிரகணம் என்பது
   1) அம்மி மிதித்தல் 2) மோதிரம் எடுத்தல்
   3) கைப்பிடித்தல் 4) அருந்ததி காட்டல்

5. மந்திரம், மாயம், மருந்து போன்றவற்றுக்கு முதன்மையளிக்கும் வேதம்
   1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வம்

6. வட பாரதத்தில் 'சுகராத்திரி' என அழைக்கப்படும் பண்டிகை
   1) ஓணம் பண்டிகை 2) தைப் பொங்கல்
   3) காமன் பண்டிகை 4) தீபாவளி

7. "குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் .........." எனும் தேவாரத்திற் குறிப்பிடப்படும் சிவ வடிவம்.
   1) நடராஜர் 2) சோமாஸ்கந்தர்
   3) கங்காதரர் 4) தட்சணாமூர்த்தி

8. நாவுக்கரசரது சரியைத் தொண்டுகளுக்கு மூல காரணமாக அமைந்தவர்
   1) மங்கையற்கரசியார் 2) திலகவதியார்
   3) மாதினியார் 4) புனிதவதியார்

9. மகோற்சவத்தில் தேர்த்திருவிழா குறித்து நிற்கும் தொழில்
   1) படைத்தல்   2) காத்தல்   3) அழித்தல்   4) அருளல்

10. திருமந்திரத்தில் காணப்படும் தந்திரங்களின் எண்ணிக்கை
   1) 4   2) 6   3) 8   4) 9

11. திருகரணங்களுக்கு எட்டாத நிலையில் உள்ள இறைவனுக்குரிய பெயர்
   1) மகேஷ்வரன்   2) சதாசிவன்   3) பரமசிவன்   4) சிவன்

12. ‘பிரபோத சைதன்யர்’ என்ற பிரமச்சரிய நாமத்தினை கொண்டவர்
   1) சுவாமி சிவானந்தர்   2) சுவாமி இராமகிருஷ்ணர்
   3) சுவாமி விவேகானந்தர்   4) சுவாமி விபுலானந்தர்

13. “அடியார் நடுவுளிருக்கும் அருளைப் புரியாய்” என்று பாடியவர்
   1) சம்பந்தர்   2) சுந்தரர்   3) அப்பர்   4) மாணிக்கவாசகர்

14. பஞ்சாங்கத்தை குப்தப் பேரரசு காலத்தில் கணித்தவர்
   1)ஆரியப்பட்டர்   2) கௌடில்யர்   3) வராகமிரார்   4) திருக்கணிதர்

15. கற்பகக் கனியாக விளங்குபவர்
   1) சிவன்   2) முருகன்   3) விநாயகர்   4) பிரம்மா

16. “உள்ளத்தால் பொய்யாது ஒழுங்கின் உலகத்தார் முன் அறியப்படும்” என்ற கூற்று இடம் பெறுவது
   1) மகாபாரதம்   2) இராமாயணம்
   3) சிலப்பதிகாரம்   4) மணிமேகலை

17. திருமுறைப்பாடல்களைப் பாடுவதற்கு முன்னும் பாடிய பின்னும் சொல்ல வேண்டிய மந்திரம்
   1) ஓம்   2) திருச்சிற்றம்பலம்
   3) சிவசிவ   4) நமசிவாய

18. இலிங்க வழிபாடு வீடுபேறு அடைந்தவர்கள்
   1) திருமூலர், குலச்சிறையார், பூசலார்
   2) சாக்கிய நாயனார், பூசலார், கலிக்காமர்
   3) இயற்பகையார், சிறுத் தொண்டர், திருநீலகண்டர்
   4) மங்கையற்கரசியார், சிறுத்தொண்டர், சேரமான்

19. கொடிக்கவி எனும் நூலின் ஆசிரியர்
   1) மெய்கண்டார்   2) அருணந்தி சிவாச்சாரியார்
   3) மறைஞானசம்பந்தர்   4) உமாபதி சிவாச்சாரியார்

20. சிவலிங்கத்தின் அடிப்பாகத்தில் அமைந்திருக்கும் உடுக்கு போன்ற பீடம்
   1) சங்கு   2) அங்குசம்   3) ஆவுடையார்   4) பாணம்

21. சுவாமி விபுலானந்தர் பிறந்த ஆண்டு
   1) 1892   2) 1893   3) 1894   4) 1895

22. “தந்ததுன் தன்னைக் கொண்ட........” என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்
   1) திருவீழிமிழலை   2) தில்லை   3) திருவொற்றியூர்   4) திருவாவூர்

23. சமகாலத்தில் வாழ்ந்த நாயன் மார்கள்
    1) சுந்தரர், சம்பந்தர்
    2) அப்பர், சம்பந்தர்
    3) சுந்தரர், மாணிக்கவாசகர்
    4) சுந்தரர், அப்பர்

24. மூவகை வினைகள் அடங்கும் தொகுதி
    1) அருவம், உருவம், அருவுருவம்
    2) சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்
    3) சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம்
    4) ஆணவம், கன்மம், மாயை

25. திருக்கூடச் சிறப்பு காணப்படும் நூல்
    1) கந்தபுராணம்
    2) கரசை புராணம்
    3) சிவப்புராணம்
    4) பெரிய புராணம்

26. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற ஆதார சுருதியுடையோர்
    1) முனிவர்
    2) சித்தர்
    3) மானிடர்
    4) அந்தணர்

27. திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டு திருக்கோயில் கதவை அடைக்கப்பாடிய பதிகம்
    1) பண்ணிநேர் மொழி........
    2) 'சதுரம் மறை............'
    3) 'தோடுடைய செவியன்..........'
    4) 'மண்ணில் நல்லவண்ணம்.......'

28. வேதத்தின் ஞான காண்டப்பகுதியாக அமைவது,
    1) சங்கிதை
    2) பிராமணம்
    3) உபநிடதம்
    4) ஆரணியகம்

29. ஐம்பொறிகள் எனப்படுபவை
    1) மெய், வாய், கண், மூக்கு, செவி
    2) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
    3) கலை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்
    4) மனம், புத்தி, சித்தம், அகங்காரம், மமகாரம்

30. காப்புக்கட்டுதல், ஏழடிவைத்தல், கன்னிகாதானம் என்பன,
    1) ஆலய மகோற்சவத்தின் போது நடைபெறும் கிரியை
    2) திருமண மேடையில் நடைபெறும் கிரியைகள்
    3) நித்திய, நைமித்திய கிரியைகளில் இடம் பெறுகின்றன.
    4) நாட்டார் தெய்வ வழிபாடுகளில் இடம் பெறுகின்றன.

31 - 33 வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி விடை தருக.

A- மெய்கண்டார்
B - அருணந்தி சிவாச்சாரியார்
C - மறை ஞான சம்பந்தர்
D - திருப்பெண்ணாகடம்
E - திருத்துறையூர்
F - கொற்றவன்குடி
G - சுவேதனப் பெருமாள்
H - சதாசிவம்
I - பரமசிவானந்தம்

31. சகலாகம பண்டிதர் எனும் காரணப் பெயரையுடையவரோடு தொடர்புடைய தொகுதி
    1) CFG
    2) AEI
    3) BEH
    4) CEI

32. ஆவணிமாத உத்தர நட்சத்திரத்தில் முத்தியடைந்தவருடன் தொடர்புடைய தொகுதி
    1) CDI
    2) AFG
    3) BDH
    4) CEH

33. சிவஞான போதம் எனும் தத்துவ நூலோடு தொடர்புடைய தொகுதி
    1) BDI
    2) CDG
    3) BIG
    4) ADC

34. ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’ என்றுரைத்தவர்
    1) திருமூலர் 2) ஔவையார் 3) திருவள்ளுவர் 4) தாயுமானவர்

35. திலகவதியார் தொண்டு செய்த சிவாலயம் காணப்படுவது
    1) திருப்பதி 2) திருவதிகை 3) சீர்காழி 4) மதுரை

36. சூரிய பகவானுக்கும் உஷா தேவிக்கும் மகனாகத் தோன்றியவர்
    1) ஆஞ்ச நேயர் 2) முருகன் 3) வீரபத்திரர் 4) சனீஸ்வரர்

37. மகோற்சவத்தில் ஐந்தொழில் முடிபையும் ஆன்மாக்கள் முத்தியடைதலையும் குறிப்பது
    1) வாகனத்திருவிழா 2) கொடியேற்றம்
    3) கொடியிறக்கல் 4) தீர்த்தம்

38. இறைவனால் அருளப்பட்ட நூல்களாக திகழ்வன
    1) வேதம், ஆகமம் 2) புராணம், இதிகாசம்
    3) வேதம், உபநிடதம் 4) பகவத் கீதை, திருமுறை

39. சிவாகமங்களின் எண்ணிக்கை
    1) 64 2) 28 3) 27 4) 21

40. இறைச்சிந்தனையுடன் நாம் கருமங்களில் ஈடுபட்டால்
    1) வீண்காலதாமதம் ஏற்படல்
    2) எடுத்த கருமம் தடையின்றி நிறை வேறும்
    3) குறித்த கருமத்தில் எம்மால் கவனம் செலுத்த முடியாமல் போய்விடும்
    4) மூடநம்பிக்கையை விருத்தி செய்தவர்கள் ஆவோம்

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018
# சைவநெறி / ශෛව ධර්මය - II

சுட்டெண்:................................... தரம் : **10** நேரம்: 2 மணித்தியாலங்கள்

♦ **பின்வரும் வினாக்களில் முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

1. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.
   1) திருமந்திரத்தின் எட்டாம் தந்திரம் எது பற்றி கூறுகின்றது?
   2) அகச்சந்தான குரவர்கள் யாவர்?
   3) இரட்சாபந்தனம் என்றால் என்ன?
   4) சைவ சமயிகள் கடைப்பிடிக்க வேண்டிய விழுமியப்பண்புகள் மூன்று தருக.
   5) தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் தவிரக்க வேண்டியவற்றை எழுதுக.
   6) சங்கமம் என்றால் என்ன?
   7) வேதங்களின் மறுபெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
   8) மூவகை ஆன்மாக்களிடத்தும் பொதுவாக உள்ள மலம் யாது?
   9) பெருங்கதை விரதம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்?
   10) பாடசாலைகளில் சமய ஆராதனைகள், விழாக்கள் என்பவற்றை நடத்துவதால் மாணவர் அடையும் பயன்கள் 2 தருக.

(1x2=20 புள்ளி)

2. 1) பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.
   2) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
      அ) "உற்றுமை சேர்வது........"
      ஆ) "கற்றவர் விழுங்கும் கற்பக.............."
      இ) "மீளா அடிமை உமக்கே........."
      ஈ) "நாமார்க்கு குடியல்லோம்.........."

(2x5=10 புள்ளி)

3. "வாழிதிருவாதவூரர் பதம் போற்றி"
   1) மாணிக்கவாசக சுவாமிகள் பிறந்த நாடு, ஊர், வகித்த பதவி, குருபூசைத்தினம் ஆகிய விபரங்களைக் குறிப்பிடுக.
   2) மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த அற்புதங்கள் இரண்டு எழுதுக.
   3) திருவாசகத்தின் சிறப்பை விளக்க ஓர் எடுத்துக்காட்டினைக் குறிப்பிடுக.

4. "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்"

   திருவருட்பயன்

   1) திருவருட்பயன் நூலாசிரியர் யார்? அவருடைய குருவின் பெயர் என்ன? திருவருட்பயன் எத்தனை அதிகாரங்களைக் கொண்டுள்ளது?
   2) சக்திபின்னமிலான் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
   3) முப்பொருள்கள் எவை? கடவுளுக்குரிய இருவித நிலைகளைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(10 புள்ளி)

5. ‘முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர்’
   1) சுவாமி விபுலானந்தரின் பெற்றோர் பெயர் யாது?
   2) சுவாமி விபுலானந்தரின் சமய பணிகள் மூன்றினை எழுதுக?
   3) சுவாமி விபுலானந்தரின் சமூகப்பணிகள் மூன்றினை எழுதுக.?

(10 புள்ளி)

6. “விரதமாவது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிப்படல்”
   1) விநாயகப் பெருமானுக்குரிய விரதங்கள் 2 எழுதுக.
   2) விநாயகசஷ்டி விரதத்தின் விரதநியதிகளை குறிப்பிடுக.
   3) கந்தசஷ்டி விரத இறுதி நாளன்று ஆலயங்களில் இடம் பெறும் முக்கிய சமய நிகழ்வு யாது? கந்த சஷ்டி உணர்த்தும் மெய்ப்பொருளை விளக்குக.

(10 புள்ளி)

7. பின்வரும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1) தீபாவளி
   2) இறைச்சிந்தனைகள்
   3) வேதம்
   4) திரஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள்

(10 புள்ளி)